**ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு செயற்திட்டம் (ஐ - வீதி) - 2018**

---

ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ - வீதி) செயற்திட்டத்தின் 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பகுதி – 1 இற்கான 2014 நவம்பர் 05 ஆம் திகதிய 3171 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க, பகுதி - 2 இற்கான 2015 மே 28 ஆம் திகதிய 3221 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 3222 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் கடன் இலக்க மற்றும் பகுதி – 3 இற்கான 2015 டிசெம்பர் 11 ஆம் திகதிய 3225 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 3226 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் இலக்க மற்றும் பகுதி – 4 இற்கான 2017 டிசெம்பர் 15 ஆம் திகதிய 3610 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிராமிய சமூகங்கள் மற்றும் சமூக பொருளாதார நிலையங்களுக்கிடையில் வீதி அணுகுமுறையை அதிகரித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மற்றும் மாகாண வீதிகளின் போக்குவரத்து வினைத்திறனை அதிகரிப்பதும் நெடுங்கால விளைவுகளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 117,780 மில்லியனுக்குச் சமமான 906 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 104,000 மில்லியனுக்குச் சமமான 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 06 பல்வேறு பகுதி நிதியிடல் வசதியின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 13,780 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 ஜுன் 01 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2024 மார்ச் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்தின் மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 10,823.16 மில்லியனாகும், பொது திறைசேரியினால் பேணப்பட்ட பதிவுகளின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள அதனுடன் தொடர்புடைய ரூபா 12,419.59 மில்லியன் பெறுமதியுடன் உடன்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் இணக்கச்செய்யப்படாத மீதிகள் காணப்பட்டன. | பொதுத் திறைசேரியின் பேரேட்டுக் கணக்குகள் மூடப்பட்டதன் பின்னர் ரூபா 1,596.43 மில்லியன் பெறுமதியான கணக்கிடப்படாத மீதி வெளி வள திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தொடர்புடைய மீதிகள் காலத்திற்கு காலம் பொது திறைசேரியின் பதிவுகளுடன் இணக்கஞ்செய்யப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| அ) | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரிவு 4.17 | கூறப்பட்ட நிபந்தனையின் பிரகாரம், வேலைகளின் செயற்படுத்தலுக்காக பயன்படுத்துவதாக கருதப்படும் ஒப்பந்ததாரரினால் கொண்டுவரப்பட்ட அனைத்து உபகரணங்களிற்கும் ஒப்பந்ததாரரே பொறுப்புடையவராவார் என்பதுடன் வெளிக்கள பொறியியளாளரின் சம்மதம் இல்லாமல் தளத்திலிருந்து அகற்றப்பட கூடாது. இருப்பினும், 03 பொதிகளின் கீழாக சப்ரகமுவ மாகாணத்திலுள்ள கிராமப்புற வீதிகளின் புனர்நிர்மானத்தில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தக்காரரினால் ஆக்கிரமிக்கப்பட்ட அந்த | செய்யப்பட்ட முற்பணங்களை மீளப்பெறுவதில் அபாயத்திற்கான சாத்தியம். | சரியான முறையில் பதிவளிக்கவில்லை. | பிணக்கு இல்லாமல் உரிய விடையத்தை தீர்க்கவும் அதனுடன் தொடர்புடைய நபர்களை அடையானம் காணவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பொறிகள் , உபகரணங்கள் மற்றும் பல மேற்கூறிய ஒப்பந்தத்ததை நிறுத்துவதற்கு 2018 ஒக்டோபர் 16 இல் செயற்திட்ட பணிப்பாளரால் பரிந்துறை செய்யப்பட்டதன் பின்னர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சம்மதம் இன்றி களைக்கப்பட்டிருந்தது. | | | |
| ஆ) | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரிவு 4.17 | கேகாலை மாவட்டத்திலுள்ள வீதிகளின் புணரமைப்புடன் சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரரிற்கு செய்யப்பட்டிருந்த ரூபா 304.23 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம், உத்தரவாத பெறுமதி ரூபா 30.26 மில்லியனை மிஞ்சியிருந்தது. | ஒப்பந்ததாரரிற்கு நிபந்தனை அற்ற சாதகத்தன்மை செய்யப்பட்டிருந்ததுடன் முற்பணங்களை மீளப்பெறுவதற்கான சாத்தியமுமில்லை. | முற்பணத்தை மீளப்பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | முற்பணங்களை முழுமையாக ஈடுபடுத்துவதற்கு உத்தரவாதங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| இ) | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரிவு 4.17 | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், ஒவ்வொரு ஒப்பந்த பொதிகளின் கீழும் தனியான வெளிகள ஆய்வுகூடம் அமைக்கப்படல் வேண்டும். இருப்பினும், களுத்துறை மாவட்டத்தின் புணர்நிர்மான வேலைகளுடன் சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் ஒரு தனி வெளிக்கள ஆய்வு கூடம் மாத்திரமே சோதனை நோக்கத்திற்காக அமைக்கப்பட்டிருந்தது. | வரையறுக்கப்பட்ட மாதிரி பரிசோதனையின் காரணமாக தர உத்தரவாத பொறிமுறை வழுவிழக்கக்கூடும். | ஒப்பந்தக்காரர் ஒரு வெளிக்கள ஆய்வுகூடம் வழங்கியிருந்ததுடன் தற்போதைய செயலாற்றல் வரிசையுடன் சோதனைகளை செய்து முடிப்பதற்கு அது போதுமானதாகும். ஏனையவை ஒரு நேரத்தில் அது தேவைப்படும் போது பின்னர் வழங்கப்படும். | ஒப்பந்ததாரரானவர் வேலையின் தரத்தினை உறுதிசெய்து கொள்வதற்கு வழமையான சோதனைகளை மேற்கொள்வதில் தாக்கம் செலுத்துதல் வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈ) | ஒப்பந்த நிபந்தனைகளின் உட் பிரிவு 14.6 | ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய இடைக்கால கொடுப்பனவின் குறைந்தபட்ச பெறுமதி ஒப்பந்தப்பெறுமதியில் 1.5 சதவீதமாக தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும், 21 பொதிகளின் கீழான இடைக்கால கொடுப்பனவுப்பத்திரத்தின் மதிப்பீட்டின் 102 நிகழ்வுகள் ஆரம்ப தேவைப்பாட்டிற்கு கீழே காணப்பட்டது. | இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் மதிப்பீட்டில் வரம்பு மீறிய கிரயம். | ஒப்பந்தத்தினுள்ள ஏற்பாடுகள் கட்டாயமானதொன்றாக இல்லாது ஒப்பந்தத்தினுள்ள ஒப்பந்ததாரரின் காசுப்பாய்ச்சலினை மேம்படுத்துவதற்கான செயல்முன்னேற்றத்தின் அடிப்படையிலான கொடுப்பனவொன்றை பரிந்துறைப்பதற்காக ஒப்பந்ததாரரினால் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரர்களிற்கு கிரயம், நேரம் மற்றும் சாதகத் தன்மையினை குறைத்துக் கொள்வதற்காக ஒப்பந்த நிபந்தனைகளில் வழங்கப்பட்ட வரம்புகளுடன் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். |
| உ) | ஒப்பந்த நிபந்தனைகளின் உட் பிரிவு 1.14 | உப பிரிவின் பிரகாரம், ஒப்பந்தக்காரர் கூட்டு முயிற்சியை உருவாக்குவதாக இருந்தால், கூட்டமைப்புக்கள் அல்லது ஏனைய 02 அல்லது அதற்கு அதிகமான நபர்களுடனான கூட்டிணைக்கப்படாத குழுக்கள், இந்த நபர்கள் முதலாளிக்கு ஒப்பந்தத்தின் செயற்திறனிற்கு கூட்டாகவும் தனியாகவும் தகுதியானவராக இருத்தல் வேண்டும். இருப்பினும், 02 ஒப்பந்தப் பொதிகளின் கீழான களுத்துற மாவட்டத்தின் வீதிகளின் புனர்நிர்மானத்தில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தக்காரர்கள் வெளிநாட்டு பங்குதாரர்களுடன் கூட்டுமுயற்சியொன்றை உருவாக்கியிருந்ததுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்தலின் மீதான கடமைகளை மேற்கொள்வதற்கான செயல்முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டத்திற்கான பிரதிநிதிகள் பங்குபற்றியதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | கூட்டுமுயற்சியின் பங்குதாரர்களுக்கான பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டு முயற்சியின் பங்குதாரர்களை வரவழைப்பதற்காக முதலாளி நடவடிக்கைகளை எடுத்திருந்தார். | செயல் முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டங்களிற்கு கூட்டு முயற்சியின் அனைத்து பங்குதாரர்களையும் வரவழைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.　பௌதீக முன்னேற்றம்**

**3.1　செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| இல | கூறுகள் | கணக்காய்வாளர்களின் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | தேசிய வீதிகளின் புனர்நிர்மானம். | ஆரம்பகட்ட திட்டங்களின் பிரகாரம், தேசிய வீதிகளின் 400 கிலோ மீற்றர்களின் வீதி புனர்நிர்மான வேலைகள் மீள்கட்டமைக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், தேசிய வீதிகளின் நீளமானது நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வேலையின் நோக்கெல்லையின் மாற்றம் காரணமாக 284.52 கிலோமீற்றர் வரை குறைக்கப்பட்டிருந்தது. அதில், மரதன்கடவல - ஹபரன வீதியின் 25 கிலோ மீற்றர்களின் புனர்நிர்மான வேலைக்கான ஒப்பந்தங்கள் மாத்திரமே நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் திகதியிலிருந்து 3 வருடங்கள் கழிந்ததன் பின்னர் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. | நிர்மான வேலைகளின் பூர்த்தியாக்களில் காணப்பட்ட தாமதம் காரணமாக கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடு. | மரதன்னடவில - ஹபரன வீதிப்பகுதியின் புனர்நிர்மானத்தின் மீதான ஒப்பந்தம் 2019 ஜூன் 05 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய வீதிகளின் அளவை மற்றும் வடிவமைப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. | ஒப்பந்ததாரர்கள் கிரய அதிகரிப்பையும் ஒப்பந்த காலப்பகுதியின் நீடிப்பையும் தவிர்த்துக் கொள்வதற்கான நேர இலக்குகளை அடைந்து கொள்வதற்காக செல்வாக்கு செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | மாகாண வீதிகளின் புனர்நிர்மானம் | வேலைத்திட்டத்தின் பிரகாரம், தெற்கு, மத்திய, சப்பிரகமுவ, வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்கள் மற்றும் மேல் மாகாணத்திலுள்ள களுத்துற மாவட்டம் ஆகியவற்றிலுள்ள கிராமப்புர வீதிகளின் 3,033.58 கிலோமீற்றர்கள் புனரமைக்க பட்டியலிடப்பட்டிருந்தது. மாகாணங்களில் புனரமைக்கப்பட்ட வீதிகளின் செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன. | | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புனர்நிர்மான வேலைகளின் செயலாற்றல் இருந்தாலும் கூட வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |

| மாகாணம் | கிராமப்புர வீதிகளின் புனர்நிர்மான வேலைகள் எதிர்பார்க்கப்பட்டவை | | 2018 திசெமம்பர் 31 இல் உள்ளவாறு அடைவுகள் | காரணங்கள் |
|---|---|---|---|---|
| | பூர்த்தியாக்கப்பட வேண்டிய திகதி | கி.மீ | கி.மீ | |
| வட | 2017 மே 17 | 588.50 | 542.40 | ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக |
| மத்திய | 2017 திசெம்பர் 15 | | | |
| | | 582.21 | 542.40 | |
| வட மேற்கு | 2018 ஜுலை 31 | 610.97 | 434.43 | |
| சப்ரகமுவ | 2017 திசெம்பர் 15 | | | |
| | | 274.27 | 323.88 | |
| களுத்துற | 2018 ஜுலை 24 | 269.41 | 121.27 | |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| அ) | 02 ஒப்பந்தப்பொதிகளின் கீழான களுத்துற மாவட்டத்திலுள்ள வீதிகளின் 183 கிலோமீற்றர்களின் புனர்நிர்மான வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தக்காரர்களின் செயலாற்றல் ஒப்பந்தக்காரரினால் எதிர்கொள்ளப்பட்ட நிதிச் சிக்கல்கள் காரணமாக இலக்குகளுக்கு பின்னாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபையானது ஒப்பந்தத்தை வழங்கிய நேரத்தில் ஒப்பந்ததாரரின் நிதி இயலாமை மதிப்பிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படடிருக்காமை அவதானிக்கப்பட்டது. அதன் பெறுபேறாக ஒப்பந்தகாரரிற்கு செய்யப்பட்ட ரூபா 560.97 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 2018 திடிசமபர் 31 இல் உள்ளவாறு மீட்கப்படாமல் காணப்பட்டது. | வீதி நிர்மான வேலைகளின் பூர்த்தியாக்கலில் தோல்வி ஏற்படுவதற்கான சாத்தியம். | எதிர்காலத்தில் விலை கேட்போரின் நிதி இயலளவினை முறையாக மதிப்பிடுவதற்கு போதுமான நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்ததுடன் வேலை முற்பணத்தில் செலுத்தப்படாத மீதியை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அதிகபட்ச முயற்சிகள் எடுக்கப்பட்டுமிருந்தன. | நிலுவைகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ) | சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள 15 பொதிகளின் கீழான வீதி புனர்நிர்மான வேலைகள் மந்தகதியான செயலாற்றலை காட்டியதுடன் அதன் விளைவாக, மொத்தமாக ரூபா 2,969 மில்லியன் பெறுமதியான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பூர்த்தியாக்கப்பட வேண்டிய திகதியிலிருந்து 05 மாதங்கள் கழிந்த பின்னர் மீளப்பெறப்படாமல் இருந்தன. | வழுவற்ற ஒப்பந்த நிர்வாகத்தின் காரணமாக நட்டங்களுக்கான சாத்தியப்பாடு. | பற்றாக்குறையான வேலைச் செயலற்றல் காரணமான மீளப்பெறுகை பாதிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகளை மீளப்பெற்றுக்கொள்ள செயற்திட்டத்தினால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| இ) | சப்பிரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணத்திலுள்ள களுத்துறை மாவட்டத்தின் கிராமபுர வீதிகளின் புனர்நிர்மானத்துடன் தொடர்புபட்ட 4,031 பொது மக்கள் முறைப்பாடுகளில் 707 முறைப்பாடுகள் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாது 2019 மார்ச் 28 இல் உள்ளவாறு தீர்க்கப்படாமல் காணப்படுகின்றது. வீதி புனரமைப்பு வேலைகளின் காரணமாக குடியிருப்பாளர்களின் இழப்பீடுகள் மீதான 145 நிகழ்வுகளை இது உள்ளடக்குகின்றது. இருப்பினும், அதனுடன் தொடர்புடைய காப்புறுதிப் பத்திரங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது மக்கள் ஆர்ப்பாட்டத்திற்கும் வீதி புனரமைப்பு வேலைகளில் தோல்வியடைவதற்குமான சாத்தியம். | பெரும்பாண்மை மக்களின் முறைப்பாடுகள் முழுமையாக தீர்க்கப்பட்டுள்ளதுடன் மீதி 2019 மே இல் உள்ளவாறு கலந்து கொள்ளப்பட்டிருந்தது. | பங்குதாரர்களின் எதிர்பார்கைகளை நிபர்த்தி செய்ய அமுல்படுத்தல் முகவரினால் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 வெளிக்கள விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| அ) | ஒப்பந்தப் பொதி 02 இன் கீழான களுத்துறை மாவட்டத்தின் வீதி புனர்நிர்மான வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தக்காரரினால் அமர்த்தப்பட்டிருந்த செயற்திட்ட முகாமையாளர், பிரதி செயற்திட்ட முகாமையாளர், நெடுஞ்சாலை மற்றும் நடைபாதை வடிவமைப்பு பொறியியளாளர், தரநிர்ணய முகாமையாளர், கட்டுமான பொறியியளாளர், தள பொறியியளாளர், கணிய அளவியலாளர், உதவி | ஒப்பந்தத்தின் உத்தியோகத்தர்களின் முக்கிய நபர்களின் பற்றாக்குறை காரணமாக ஒப்பந்தப்பொறியின் கீழான ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த செயற்பாடு தோல்வியடையக்கூடும். | ஒப்பந்தத்தின் உப பிரிவு 15.1 இன் கீழ் திருத்துவதற்கு பொறியியலாளர் அறிவுறைகளை வழங்கியிருந்தார். | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக வழுவான நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டியதுடன் ஒப்பந்தத்தின் கீழான வேலைகளின் செயற்பாட்டிற்காக போதுமான உத்தியோகத்தர்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அளவையாளர் மற்றம் சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் போன்ற முக்கிய பதவியினர்கள் ஒரு வருடத்திற்கு காலியாக காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. இது செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் மிருதுவான செயற்பாட்டினை பாதித்திருந்தது. மேலும், ஒப்பந்தக்காரர் களுத்துறை மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட வீதிகளின் தர நிலையை பேனுவதற்கான வெளிக்கள பரிசோதனைகளை செயல்படுத்துவதற்காக போதுமான ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருக்காமை 2018 பெப்ரவரி 25 இல் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள விஜயத்தின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | | பனிக்கமர்த்துவதில் செல்வாக்கு செலுத்தல் வேண்டும். |
| ஆ) | ஒப்பந்தக்காரர் முன்னிருந்த பெட்டி வடிவான கீழ் வாய்க்கால் பாலத்தில் தார் மேல் பொருந்தியிருந்ததுடன் வடமேல் மாகாணத்திலுள்ள வாரெல்ல சந்தியிலிருந்து நாரமல - நம்பராவ வீதியின் முதல் 21 கிலோமீற்றர் பிரிவின் பெல்வாய் அகலப்படுத்தலானது கீழ் வாய்க்கால் பால அகலப்படுத்தலுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வடிவமைப்பு அனுமதிக்கப்படாமல் தீர்மானிக்கப்படடிருந்தது. | வாகன நகர்வுகளில் பிரச்சனைகள் எழக்கூடும். | ஒப்பந்ததாரருடைய வசதியினை கருத்தில் கொண்டு, கீழ் வாய்க்கால் பாலம் மற்றும் பெல்வாயினை பின்னர் அகலப்படுத்தும் எண்ணத்துடன் தார் கான்கிரீட்டினை தொடர்ந்து அமைப்பதற்கு பொறியியலாளர் அனுமதிக்கப்படிருந்தார் | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது இந்த விடையத்தை விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| இ) | புனையப்பட்ட தார் ஆனது நியம மட்டமான 97 சதவீதத்திற்கு கீழாக 92 சதவீதம் தொடக்கம் 96 சதவீதம் எனும் வீச்சிற்குள் தாரின் மேற்பரப்பில் கச்சிதமாக இருந்தது. வடமேல் மாகாணத்திலுள்ள விளாவ சந்தி தொடக்கம் குபுக்கேவேவ வீதியில் 2018 ஜுலை 01 இல் மேற்கொண்ட வெளிக்கள விஜயத்தின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. தர உத்தரவாத பொறிமுறை அதன்மீது பயன்படுத்தப்படாமை இதனால் சாட்சிப்படுத்தப்பட்டது. | வீதியின் தாங்குதிறனில் பிரச்சனைகளுக்கான சாத்தியம். | கிராமப்புற வீதிகளின் மீதான குறைந்த வாகன நெரிசல் காரணமாக, உரிய விடையத்தில் நிபுனர்களின் ஆலோசனைகளுடன் தாரின் கச்சிதத்தன்மையின் ஆகக்குறைந்த அளவினுடைய தேவைப்பாட்டின் விகிதாசாரத்தினை குறைப்பதற்கு அது வழங்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட கண்கானிப்பு பிரிவினால் பொறுப்புடைய தரப்பினர்களை அடையாளப்படுத்துவதற்காக தர உத்தரவாத செயற்பாட்டின் மீதான பிரச்சினைகளை விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 புறநடையான கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், கடனின் செலவிடப்படாத வருமானத்தின் மீது ரூபா 475.94 மில்லியன் பெறுமதியான ஒப்படைப்புக் கட்டணங்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் வழங்கும் முகவரினால் திரும்பப் பெறப்பட்டிருந்தது. | ஒதுக்கீடினை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் இருக்கக்கூடும். | பயன்படுத்தப்பட்ட மீதிகளின் மீதான ஒப்படைப்பு கட்டணங்கள் கடன் உடன்படிக்கையின் பிரகாரமான கடனின் பயன்பாட்டு திகதியின் பின்னர் உரித்தாகும். | தேவையற்ற கிரயங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பொதி இல பியூ - 02 இன் கீழான புத்தளம் மாவட்டத்திலுள்ள வீதிகளின் 74.09 கிலோமீற்றரின் புனர்நிர்மான வேலைகளின் அளவைப்பட்டியல் மற்றும் பொறியியலாளர் மதிப்பீடுகள் என்பன முறையாக தயாரிக்கப்பட்டிருக்காதது அவதானிக்கப்பட்டதுடன் அளவைப்பட்டியலில் உள்ளடக்கப்படாத உருப்படிகளின் கீழான வேலைகள் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரமான தன்னிச்சையாக தீர்மானிக்கப்பட்ட விகிதங்களின் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியப்பாடு. | ஒப்பந்தத்தின் கீழான தேவைப்பாட்டின் பிரகாரம் செயற்திட்டத்தின் இறுதி வடிவமைப்பை நிறுவி செயல்படுத்துவதற்கான எல்லா நிலப்பரப்பு மற்றும் ஏனைய அவசியமானவற்றின் மதிப்பாய்வு மற்றும் வடிவமைப்பு நடவடிக்கைகளை நடாத்துவதற்கு ஒப்பந்ததாரர் பொறுப்புடையவராக காணப்படுவார். | செயற்திட்ட கண்கானிப்பு பிரிவினால் பொறுப்புடைய தரப்பினர்களை அடையாளப்படுத்துவதற்காக விலைமனு மதிப்பாய்வு செயற்பாட்டின் மீதான பிரச்சினைகளை விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| பொதி இல | விபரம் | அலகு | பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| பியு-2 | மரங்களின் அகற்றல்- 2000 மி.மீ ற்கு மேலான சுற்றளவு | என்ஆர் | 20,000 |
| | நீழுரை வடிகான்களின் உட்புச்சி, கொன்கிரீட் தரம் 15(20) | சியு.எம் | 18,000 |
| | கொன்கிரீட் தரம் 25(20) உடனான வடிகான் உட்புச்சி | சியு.எம் | 22,000 |
| | கம்பிகட்டுதலுடனான 150 மி.மீ தடிப்பான ப்ரீகாஸ்ட் கான்க்ரீட் கவர் ஸ்லாப்and form | எஸ்கியுவ். எம் | 6,000 |
| | கம்பிகட்டுதலுடனான 150 மி.மீ தடிப்பான ப்ரீகாஸ்ட் கான்க்ரீட including reinforcement | எஸ்கியுவ். எம் | 7,200 |
| | குழாய்களின் என்காஸ்மன்ட் கான்கிரீட் | சீயூ.எம் | 20,000 |
| | சட்டின்வேலைகள் மற்றும் கம்பிகளுடனான 450 மி.மீ விட்டமான வழுவான கான்கிரீட் குழாய். | ஏல்ஐ.எம் | 9,000 |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 1981 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம், உள்நாட்டு பங்காளருடன் இணைந்து ஒப்பந்தத்தினை மேற்கொள்ளும் வெளிநாட்டு ஒப்பந்ததாரர் பொது ஒப்பந்தத்தின் பதிவாளரிடம் பதிவு செய்தல் வேண்டும். இருப்பினும் உள்நாட்டு ஒப்பந்ததாரர்களுடன் | சட்ட நடவடிக்கைகள் எடுப்பதன் மீது பிரச்சினைகள் எழக்கூடும். | வேலை ஆரம்பிப்பு முற்பண மீதிகளை மீளப்பெறும் நோக்கத்துடன் ஒப்பந்ததாரர்களிற்கு எதிராக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன | பொறுப்புடைய தரப்பினர்களை அடையாளம் கண்டுகொள்ள செயற்திட்ட கண்காணிப்பு பிரிவினால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் சுற்றுநிருப |

| | | | | |
|---|---|---|---|---|
| | இணைந்து வட மேல் மாகாணம் மற்றும் களுத்துற மாவட்டத்தின் வீதி புனர்நிர்மான வேலைகளில் ஈடுபட்டிருந்த சீனா மற்றும் இந்தியாவிலிருந்தான ஒப்பந்ததாரர்களின் 02 நிறுவனங்களின் பதிவினை உறுதிப்படுத்திக்கொள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. இருப்பினும் குருநாகல் மாவட்டத்திலுள்ள உரிய ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றலின் காரணமாக பின்னர் இடை நிறுத்தப்பட்டதுடன் ரூபா 683.18 மில்லியன் பெறுமதியான வேலை ஆரப்பிப்பு முற்பணத்தை மீளப்பெற்றுக்கொள்ள எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | | | நிபந்தனைகளினை கடைப்பிடிப்பதன் மீதான அலட்சியத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 முன்னய கணக்காய்வு அறிக்கைகளிள் குறிப்பிடப்பட்ட விடயங்களில் தீர்க்கப்படாமல் இருந்தது.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கிராமப்புர வீதிகளின் புனர்நிர்மானத்தில் ஈடுபட்டிருந்த உள்நாட்டு ஒப்பந்ததாரர், வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தின் 2016 செப்தம்பர் 05 ஆம் திகதிய சுற்றறிக்கை இல. டிஜபீ/டிபீ/08/53/2016-69 இல் வழங்குவதற்கு ஒப்புதலலிக்கப்பட்டிருந்த சலுகைகள் தேவைக்கதிகமாக பெறப்பட்டிருந்ததுடன் வீதி புனர்நிர்மான வேலைகளின் பூர்த்தியாக்கலின் பின்னர் அத்தகைய பொறி மற்றும் உபகரணங்களுடனான வரிச்சலுகையின் கீழ் ரூபா 324 மில்லியன் பெறுமதியான பொதி மற்றும் உபகரணம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், ஒப்பந்தப்பொதிகளில் வழங்கப்பட வேண்டுமென ஒப்புதலலிக்கப்பட்ட உரிய நடவடிக்கைகளுக்கான அந்த பொறி இயந்திரங்களின் பயன்பாட்டினை கண்காணிக்க முறையான செயற்முறை நிகழ்ச்சித்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த பொதிகளிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் அவரது ஒப்பந்தங்கள் மற்றும் திட்டங்களை | நிதிகளின் தவறான முறையிலான பயன்பாடு மற்றும் சுற்றுநிரூப நிபந்தனைகளின் மீறல். | ஒருங்கிணைநத வீதி முதலீட்டு திட்டத்தின் ஒப்பந்ததாரரிற்கு அதை ஒரு தேசிய அபிவிருத்தி செயற்திட்டமாக கருதி நிதி கொள்கை திணைக்களத்தினால் வரிச்சலுகை வழங்கப்பட்டிருந்தது. | இந்த விடையத்தை விசாரணை செய்ய உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யமுடியாது போனதுடன் அந்த உருப்படிகள் மீள் ஏற்றுமதி செய்யப்பட்டதா இல்லையா என்பதை சரிபார்க்க எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவுமில்லை. | | | |
| (ஆ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம் ஒப்பந்தத்தின் முறையான செயற்பாட்டிற்காக ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் செயற்திறன் பாதுகாப்பு பெற வேண்டி இருக்கும் என்றாலும், கொள்முதல் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த விலைமனுப்பத்திரங்களின் தவறான வெளப்படுத்தலின் காரணமாக ஒப்பந்ததாரரினால் தனது சொந்த செலவில் செயற்படுத்த வேண்டியிருந்ததன்படி மொத்தமாக ரூபா 608.60 மில்லியன் ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது செயலாற்றல் உத்தரவாதங்களை வழங்குவதற்கான செலவுகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களை அனுமதிப்பதனூடாக செயற்திட்டமானது அளவைப்பட்டியலில் தனியான செலுத்தும் உருப்படியாக உள்ளடக்கிருந்தமை மேற்கூறிய தேவைப்பாட்டுடன் முறன்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரரிற்கு தகாத பலன்கள். | கிழக்கு,வடக்கு மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள பொதிகளில் பொது நிபந்தனையின் உப பிரிவு 4.2 அதன் படி திருத்தப்பட்டிருந்ததுடன் பீஓகியு வில் உள்ள செலுத்தும் உருப்படி நீக்கப்பட்டுமிருந்தது. | மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |